**வெற்றிக்கு வழி சொன்ன வெட்டிவேர்.. இடுபொருள் இல்லாமலே இளிமையான விளைச்சல்**



சிவகங்கை மாவட்டம் வேலங்குடிக்கு அருகில் உள்ள குறுவாடிப்பட்டியைச் சேர்ந்தவர் தான் இந்த பாண்டியன். இரண்டு வருடத்திற்கு முன் 'புல்லில் புதைந்து கிடைக்கும் புதையல் வெட்டி வேர்' என்று பசுமை விகடன் இதழில் வந்த கட்டுரையைப் படித்த உடனே கோயம்புத்தூரில் உள்ள பாரதியார் பல்கலைக்கழகத்தைத் தொடர்பு கொண்டேன். "பாரதியார் பல்கலைக்கழகத்தில் இருந்து 2,000 விதைக் கிழங்குகளை வாங்கி வந்து, தென்னைக்கு ஊடுபயிராக பத்து சென்ட் நிலத்தில் சோதனை முயற்சியாக நடவு செய்தேன். நோய், நொடி தாக்காமல் இரசாயன உரம் இல்லாமல் பயிர் நன்றாக வளர்ந்து வந்தது. முதலில் நடவு செய்த பத்து சென்ட் நிலத்தில் இருந்து 70 கிலோ வேர் கிடைத்தது. இது எனக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியது. மறுபடியும் மூன்று ஏக்கரில் வெட்டிவேர் பயிர் செய்திருக்கிறேன்" என்று கூறிய பின்னர், தென்னைக்கு இடையில் வெட்டிவேர் சாகுபடி செய்யும் முறையை விவரித்தார்.

**தென்னைக்கு ஊடுபயிர்:**

"வெட்டிவேர் பத்து மாத பயிர். நவம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரை நடவு செய்ய ஏற்ற காலம் என்றாலும் எல்லா காலத்திலும் நடவு செய்யலாம். பொதுவாக வெட்டிவேர்க்கு மண்ணைச் சுத்திகரிக்கும் தன்மை உள்ளதால், எல்லா வகை மண்ணிலும் பயிர் செய்யலாம். இரசாயன உரங்களால் பாதிக்கப்பட்ட மண்ணை மறுபடியும் உயிரோட்டமாக்குவதற்கு வெட்டிவேரை பயிரிட்டால் போதும். மேலோட்டமாக வேர் பாய்ச்சாத, ஓரளவு வெயிலை நிலத்தில் விழச் செய்யக்கூடிய அனைத்துப் பயிர்களுக்கு இடையிலும், வரப்புகளிலும் வெட்டிவேரை சாகுபடி செய்யலாம்.

தென்னைக்கு இடையில் இதை நடவு செய்யும்போது இரண்டு வரிசைக்கு மத்தியில் நடவேண்டும். தென்னையை ஒட்டி நடவு செய்தால், காய் பறிப்பதற்கும், நடமாடுவதற்கும் சிரமமாக இருக்கும். இட வசதிக்கு

ஏற்ப தொழுவுரம் போட்டு பாத்தி எடுத்து நீர் பாய்ச்சிக் கொள்ள வேண்டும். பின்பு ஈரமாக இருக்கும் பாத்தியில் செடி ஒரு அடி இடைவெளியில் நெல் நாற்று போல் நடவு செய்தால் போதும். முதல் 15 நாட்களுக்கு பாத்தியில் ஈரம் காயாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒரு மாதத்திற்குள் செடி துளிர்த்து மேலெழுந்துவிடும். நான்கு மாதத்திற்குள் வரும் களைகளை அப்புறப்படுத்த வேண்டும். நான்காவது மாதம் களையெடுக்கும் போது செடிக்கு மண் அணைத்து விட வேண்டும். அதற்கு மேல் கிளைகள் அதிகம் வரும் என்பதால் களை எடுக்க வேண்டிய அவசியம் இருக்காது. நான்காவது மாதம் எடுக்கும் களைக்குப் பிறகு அறுவடை வரை 15 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சுவதைத் தவிர வேறு எந்தப் பராமரிப்பும் தேவையில்லை.

**தூருக்கு 50 கிழங்குகள்:**

வெட்டிவேரை எந்த நோயும் தாக்குவதில்லை. சமயங்களில் இலையின் நுனிப்பகுதி கருகியது போல் காணப்படும். ஆனால் அதனால் மகசூல் பாதிப்பு இருக்காது. புல்லைப் போல் வளரும் தாள், பத்தாவது மாதத்தில் பெருக்கத் தொடங்கி தண்டு போல் கனமாகிவிடும். அந்த நேரத்தில் செடியும் பூக்கும். அதுதான் அறுவடைக்கான நேரம். முதலில், நெல்லை அறுப்பது போல் நிலத்திற்கு மேலே உள்ள புல்லை அறுத்து விட வேண்டும். பின்பு 'வாச்சாத்து' (மண்வெட்டி போன்ற கருவி) வைத்து வேரைச் சுற்றி மண்ணை தோன்டி வேரை வெளியில் எடுக்க வேண்டும். தென்னைக்கு நடுவே ஊடுபயிராக இருந்தால் அந்த இடத்தில் தோண்டும்போது அதிக ஆழமாகத் தோண்டக்கூடாது. அப்படிச் செய்தால் தென்னையின் வேர்கள் பாதிக்கப்படும்.
தோண்டி எடுத்த வெட்டிவேரை நீரில் அலசி, வேர் மற்றும் தண்டுப் பகுதிகளை தனியாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். வேர் பகுதிக்கும் தண்டுப் பகுதிக்கும் இடையில் வேர்முடிச்சு போன்ற கிழங்கு இருக்கும். இதுதான் உயிர்பகுதி. இதுதான் விதைக் கிழங்கு. ஒரு தூருக்கு அதிகபட்சமாக 50 கிழங்குகள் வரை இருக்கும். இதை புதிதாக நடவு செய்ய விரும்பும் விவசாயிகளுக்கு விற்பனை செய்யலாம். கிட்டத்தட்ட 2 அடிக்கும் அதிகமான நீளம் கொண்ட வேர்கள் கூட அறுவடையில் கிடைக்கும். இந்த வேர்களை நிழலில் ஒரு வாரம் வரை உலர்த்தி விற்பனைக்கு அனுப்பலாம்.

**ஏக்கருக்கு 2 டன் வேர், 30 டன் வைக்கோல், 10 லட்சம் கிழங்கு..!**

முதல் அறுவடையில் பத்து சென்ட் இடத்திலிருந்து 70 கிலோ வேர் கிடைத்தது. கிலோ 100 ரூபாய் என்று விற்பனை செய்தேன். மொத்தம் 3,500 ரூபாய் செலவு செய்து 7,000 ரூபாய் வருமானம் கிடைத்தது.
ஊடு பயிராக செய்கின்ற பொழுது ஒரு அடி இடைவெளிவிட வேண்டியிருக்கும். தனிப்பயிராக செய்தால் முக்கால் அடி இடைவெளி விட்டாலே போதுமானது. ஏக்கருக்கு 50 ஆயிரம் விதைக் கிழங்கு தேவைப்படும். அரையடி உயரம் பாத்தி போட்டு நடவு செய்தால் வேர் அதிகமாக கிடைக்கும். ஒரு ஏக்கருக்கு கணக்குப் போட்டால் 7 டன் வரைக்கும் கிடைக்கும். ஆனால் குறைந்தபட்சம் இரண்டு டன் வேர் கண்டிப்பாக

கிடைக்கும். இதைத் தவிர 30 டன் வைக்கோல், 10 லட்சம் விதைக் கிழங்கு என்று கூடுதல் பலனையும் பார்க்கலாம். ஒரு கிலோ வேர் சராசரியாக 50 ரூபாய் வைத்தாலும், இரண்டு டன்னிற்கு ஒரு லட்ச ரூபாய் கிடைக்கும்.
விதைக் கிழங்கு அதிகபட்சம் இரண்டு ரூபாய் வரை கேரளாவில் விலை போயிக்கொண்டிருக்கிறது. 10 லட்சம் விதைக் கிழங்கும் விலை போனால் அதில் 20 லட்சம் ரூபாய் கிடைக்கும். ஆனால் விவசாயிகளுக்கு இந்த வெட்டிவேர் விஷயம் இன்றும் சரியாகப் போய்ச் சேர வில்லை. ஆகையால் அந்த அளவுக்கெல்லாம் விலை போகாது. பாரதியார் பல்கலைக்கழகத்திலேயே 50 பைசாவுக்குதான் கொடுக்கறார்கள். அதுவும் குறைந்த அளவுக்குதான் போய்க்கிட்டிருக்கு.

காளான் வளர்ப்பிற்கும், மண்புழு வளர்ப்பிற்கும் வெட்டி வேரோடபுல் உபயோகமாக இருக்கும். இளம் புல்லை அறுத்து வாடவிட்டு மாட்டுக்குத் தீவனமாகவும் கொடுக்கலாம்.
இயற்கை உரம், செயற்கை உரம், பூச்சிக்கொல்லி, பூச்சி விரட்டி என்று எந்த இடுபொருளும் இல்லாமல் வளர்ந்து வந்துவிடும் வெட்டிவேர். மண்ணை வளமாக்கிறதோடு, வருமானத்தையும் திடமாக்கும். அப்படிப்பட்ட வெட்டிவேரை எனக்கு அறிமுகம் செய்த பசுமை விகடன், பாரதியார் பல்கலைக்கழகம் இது இரண்டுக்கும் நான் எப்பவும் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன் என்று நெகிழ்ந்தார்.

**தொடர்புக்கு:**

சி. பாண்டியன்,

சிவகங்கை மாவட்டம்,குறுவாடிப்பட்டி,வேலங்குடி.

அலைபேசி: 93629 - 49176